# சடங்குகள் - ஒரு பார்வை

தலைக்காவேரி இடக்காவேரி, கொள்ளடம், நடந்தாய் வாழி காவேரி என்று பலப் பெயர்களை கொண்ட காவேரி ஜலப்பிரவாகமாக சென்றுக் கொண்டிருக்கிறது. அந்தி வெய்யிலில் தங்க மயமாக காட்சி அளிக்கிறது. கனகதாரையோ என்ற எண்ணம் எழுகிறது.

இடது தோளில் என் அம்மாவின் அஸ்தி கலசத்தை சுமந்து கொண்டு திரும்பி பார்க்காமல் நதியில் இறங்கி பின்னால் எறிந்தேன். என்னையும் அறியாமல் அம்மா என்று அலறினேன் வேதனையோடு. நதியில் மூன்று முறை மூழ்கினேன். என் தலைக்குமேல் நதி அமைதியாக சென்று கொண்டு இருக்கிறது.

அம்மாவின் அஸ்த்தி கரைந்தது. அம்மா ஜலமாக, காலமாக, மரணமாக, துக்கமாக, காருண்யமாக, ஜீவ சக்தியாக போய்க்கொண்டிருக்கிறது. ஒரு ஜன்மம் நிறைவடைந்தது என்றார்கள் சிலர். அவள் ஆன்மா இறைவனின் அம்சம். இறப்பே இல்லை என்றார்கள் சிலர். அவளின் ஆன்மா என்றும் இருக்கும் என்றார்கள் சிலர்.

என்னில் ஒரு ஐயம் எழுந்தது. ஆன்மா இயங்க உடல் தேவையா? ஏன்? ஆன்மாவிற்கும் உடலுக்கும் எவ்வித உறவு? கேள்விகள் கேள்விகள். விடை?

ஈரத்துணியுடன் நதியின் கரைக்கு வந்தேன். ஒதுப்புறமாக ஒரு இடத்தில் அமர்ந்து யோசிக்க சென்றேன். எதை யோசிப்பது? ஆன்மாவையா? உடைலையா? பளிச்சென்று என் மனதில் உபநிஷத்தின் வாக்யங்கள் வந்தன. பிரஷதாரண்யா உபநிஷத்தில் கூறிய வாக்யங்கள்:-

Asathoma Anthar Maya Gamaya Tamasoma Jyotir Maya Gamaya, Mrithyoma Amirthamamaya Ganaya. God of my love lead me from appearance to reality, darkness to light, death to immortality.

எல்லோரும் இறைவனை வேண்டுவது மாயையிலிருந்து விடுபடவும், இறப்பிலிருந்து இறவானம் அடையவும் தானே?

சுருக்கமாக, தெளிவாக, இசைத்தன்மையுடன் கூறிய இவ்வாக்யங்கள் மிகவும் பிரசத்தி பெற்றவை.

நம் ரிஷிகள் இறவா வாக்யங்கள் உபநிஷடங்களில் உள்ளன. மனப்பாடம் செய்ய வேண்டியவை.

குறிப்பு:- சுருக்கமாக எழுதியிருக்கிறேன். உங்கள் கருத்தை என்னிடம் சொல்லவும்.

-T.K. சேதுராமன், Retd. I.A.S., சென்னை.